**(வைகாசி 22) 2026 ஜூன் 5 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு**
**திருவாரூர் நகர் மன்ற சிறப்புக்கூட்டம் நடைபெறும் அச்சமயம்**
**கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**
**முன்னிலை.திருமதி.செ.புவனப்பிரியா செந்தில், நகர்மன்ற தலைவர்**

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| **பொருள் எண் : 1**<br>தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 ஏப்ரல் 01 2026 முதல் அமலுக்கு வந்துள்ளன. அதனை திறம்பட செயல்படுத்தும் பொருட்டு மாண்பமை உச்ச நீதிமன்றம் சிவில் மேல்முறையீட்டு வழக்கு எண் 6174/2023 பிப்ரவரி 19, ஏப்ரல் 29 மற்றும் மே 5 2026–ல் தெரிவித்துள்ளபடி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விரிவான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. அதன்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை பிரதிநிதிகளான நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணை தலைவர், மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களை குப்பைகளை உருவாகும் இடத்திலேயே பிரித்தல் குறித்த கல்விக்கான முதன்மை ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், உலக சுற்றுச்சூழல் தினமான 2026 ஜீன் 05 ந் தேதி முதல் 2026 ஜீன் 12 வரையிலான ஒரு வார காலத்திற்கு விழிப்புணர்வு, பரிந்துரை மற்றும் கூட்டு நடவடிக்கைகள் மூலம் திடக்கழிவுகளை 4 வகையினங்களாக பிரித்தல், பொது இடங்களில் குப்பைகள் கொட்டாமை மற்றும் குப்பைகளை எரிக்காமை குறித்த விழிப்புணர்வை வீடு வீடாக சென்று ஏற்படுத்துவது குறித்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு பொறுப்பு நிர்ணயம் செய்து வரப்பெற்றுள்ள திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 ஐ மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண்.1578/2026/எச்1** | 1223) பதிவு செய்யப்பட்டது |

ஓம்.செ.புவனபிரியா
நகர்மன்ற தலைவர்
திருவாரூர் நகராட்சி

இடம் : திருவாரூர்
நாள் : 05.06.2026